**ஏக்கருக்கு 30 மூட்டை – இயற்கை கடலை**



தண்ணீர் தட்டுப்பாட்டிலும் தளதள மகசூல்!

கடலூர் மாவட்டம், பொன்னத்திட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் மதிவாணன். இந்தப் பகுதியில், நிலத்தடி நீர் உப்புத் தன்மையுடன் இருப்பதால் அதைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய முடியாது. பெய்யும் மழைநீரையும், ஆற்று நீரையும் நம்பி, ஆண்டுக்கு ஒரு முறை கடலை மட்டும் சாகுபடி செய்யப்படுகிறது. மற்ற மாதங்களில் நிலம் தரிசாகவே தான் கிடக்கும். இந்தச் சூழலிலும், இயற்கை வழி வேளாண்மை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மற்ற விவசாயிகளை விட குறைந்த செலவில் கூடுதல் மகசூல் எடுத்து வருகிறார் மதிவாணன்.

வழக்கமாக இந்தப் பகுதியில் கடலை சாகுபடி செய்ய ஏக்கருக்கு 10 டன் தொழுவுரமும், ஒரு மூட்டை டி.ஏ.பி., இரண்டு மூட்டை ஜிப்சம், அரை மூட்டை பொட்டாஷ், அரை மூட்டை யூரியாவை அடியுரமாக போடுகிறார்கள். மேலுரமாக இரண்டு மூட்டை ஜிப்சம் போடுகிறார்கள். இவரும் இது மாதிரிதான் செய்திருக்கிறார். ஏக்கருக்கு 30 மூட்டை மகசூல் கிடைத்தது.

அப்பொழுது இயற்கை விவசாயத்தின் மேல் பெரிதாக ஆர்வம் இல்லை அவருக்கு. ஒரு நாள் நிலத்தை சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது பரவலாக கடலைச் செடி நன்றாக வளர்ந்திருந்ததை கவனித்தார். இடையில் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் முளைவிடாமல் இருந்தது. அதாவது அந்த குறிப்பிட்ட இடத்தில் தான் இரசாயன உரங்களைக் கொட்டி கலவைப் போட்டுள்ளனர். அதனாலேயே அந்த இடத்தில் புல், பூண்டுகூட முளைக்கவில்லை.

இந்த விசயத்தை ஆராய்ந்து பார்த்தால் ரசாயன உரங்கள் நிலம் முழுக்க பரவலாக கொடுக்கப்படுவதால் இந்த பாதிப்பு என்பது அப்பட்டமாக தெரிந்த அந்த நிமிடம் இயற்கை விவசாயத்திற்கு மாறியிருக்கிறார்.

ரசாயனத்தை விட்டுவிட்டு இயற்கை விவசாயத்துக்கு மாற முடிவெடுத்த பிறகு, ஏக்கருக்கு 10 டன் தொழுவுரத்தை மட்டுமே அடியுரமாக போட்டு, மற்ற எந்த உரத்தையும் போடாமல், கடலை சாகுபடி செய்கிறார். மகசூல் பாதியாக குறைந்துவிட்டது. ஏக்கருக்கு 15 மூட்டை தான் கிடைத்தது. மனதைத் தளர விடாமல், தொடர்ந்து இயற்கை விவசாயத்தை மட்டும் செய்ததால் இரண்டாவது வருடம் 22 மூட்டை, மூன்றாவது வருடம் 30 மூட்டை என்று கிடைக்க ஆரம்பித்தது. ரசாயன விவசாயத்திலும் இதே விளைச்சல்தான் என்றாலும் அதற்கான செலவு அதிகம். அத்துடன் நிலத்தையும் விளைச்சலையும் விஷமாக்கிவிடுகிறது. ரசாயன உரம் போடப்பட்ட, நிலம் முழுக்கவே வலை விரித்தது போல் கோரைபுல் மண்டிக்கிடந்தது. களை எடுப்பதற்கு ஏக்கருக்கு 3000 ரூபாய்க்கு செலவு செய்திருக்கிறார். இப்பொழுது களைக்காக அதிகபட்சம் ரூ.1,600 தான் செலவு செய்கிறார்.

இந்தப் பகுதியை பொறுத்த வரைக்கும் ஜனவரி முதல் வாரத்தில் விதைப்பது வழக்கம். அடுத்த 20-ம் நாள் தண்ணீர் பாய்ச்சுகிறார்கள். அதிக பட்சம் 25 நாளுக்குள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆனால், இது கடை மடை பகுதியாக இருப்பதால் இரண்டு வருடமாக தண்ணீர் சரியாக வருவதில்லை. மழையும் பெய்யவில்லை.

குறிப்பாக, ரசாயன உரங்கள் உபயோகிக்கின்ற நிலங்களில் இந்த பாதிப்பு அதிகமாக தெரிந்தது. அந்த நிலங்களில் மண் சூடேறி, செடிகள் வதங்கி, அதற்குப் பிறகு வளர்ச்சியே இல்லாமல் போய்விட்டது. ஏக்கருக்கு மூன்று மூட்டை வரைக்கும் மகசூல் இழப்பு ஏற்படும் என்கிற நிலைமை. ஆனால் இவருடைய கடலைச் செடியில் மட்டும் கொஞ்சம் கூட பாதிப்பே தெரியவில்லை. 40 நாட்களுக்குப் பிறகும் தண்ணீர் இல்லாமல் செடிகள் செழிப்பாக இருந்தது. ரசாயன உரத்தில் விளைந்த கடலை எல்லாம், கசகசவென்று ஆகி, அழுக ஆரம்பித்துவிட்டது. அதனால் அந்த விவசாயிகளுக்கு ஏக்கருக்கு குறைந்தபட்சம் ஐந்து மூட்டை வரைக்கும் மகசூல் குறைந்துவிட்டது. அப்பவும் கூட இவருக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் வழக்கமாக கிடைக்கின்ற 30 மூட்டை கிடைத்துள்ளது. சென்ற வருடத்தைவிட, இந்த வருடம் செடிகள் நன்றாக தளதளவென இருப்பதால், 30 மூட்டைக்கும் மேல் மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்.

பொதுவாக கடலையில் புரோடீனியா புழுக்களின் தாக்குதல் இருக்கும். இதனால் பெரிய அளவில் சேதம் ஏற்படும். இந்தப் புழு, முதலில் இலையில் ஓட்டை போடும். பிறகு கடலை ஒட்டில் ஓட்டை போட்டு, உள்ளே புகுந்து பருப்புகளை சேதப்படுத்திவிடும். இதைக் கட்டுப்படுத்த வீரியமான ரசாயனப் பூச்சிக்கொல்லிகளை பலமுறை தெளிக்கின்றனர். அதனால் எந்தப்பலனும் இல்லை என்று மதிவாணன் தெளிவாக விளக்கமளிக்கிறார். இவர் பூச்சிக்கொல்லி எதுவும் தெளிக்காமல் இருப்பதால், இவர் நிலத்துக்கு பொறிவண்டுகள் அதிக அளவில் வருகின்றன. புரோடீனியா புழுக்களை அந்த வண்டுகளே பிடித்து உண்கின்றன என்கிறார்.

“கடலை வடிகால் வசதியுள்ள அனைத்து மண்ணிலும் வளரும். என்றாலும், மணல் கலந்த செம்மண் பூமியில் அமேகமாக வளரும். இதன் வயது 120 நாட்கள். சாகுபடி செய்யப் போகும் நிலத்தை ஒரு சால் உழவு ஓட்டி, ஒரு மாதம் நிலத்தை காயவிட வேண்டும்.

ஒரு மாதம் கழித்து ஒரு உழவு செய்ய வேண்டும். மீண்டும் 15 நாட்கள் கழித்து ஒரு உழவு செய்ய வேண்டும். இப்படி இடைவெளி விட்டு மூன்று உழவு செய்தால்தான், மண்ணுக்குள் பதுங்கியுள்ள புரோடீனியா புழுக்களின் கூட்டுப்புழு பருவத்தை அளிக்க முடியும். அதிக உழவு செய்யும்போது களைகள் முளைப்பதும் கட்டுப்படும்.

உழவு செய்த நிலத்தில் ஏக்கருக்கு 10 டன் தொழுவுரத்தை இறைத்து, மீண்டும் இரண்டு சால் உழவு ஓட்ட வேண்டும். பின்பு, நிலத்தை சமப்படுத்தி 10 அடி நீள, அகலத்தில் பாத்தி அமைக்க வேண்டும்.

ஏக்கருக்கு 80 கிலோ விதைப்பருப்பு தேவைப்படும். விதைப்புக்கு முதல்நாள் மாலை 6 மணிக்கு மேல் விதையை தண்ணீரில’ ஊற வைக்க வேண்டும். 5 மணிநேரம் கழித்து ஒரு சாக்கில் விதையைப் பரப்பி, மேலே ஒரு சாக்கை விரித்து மூட வேண்டும். மறுநாள் காலையில் முளைவிட்ட விதைகளை மட்டும் தேர்ந்தெடுத்து விதைக்க வேண்டும்.அரையடி இடைவெளியில், 2 அங்குல ஆழத்தில் விதைகளை போட்டுஇ படல் இழுக்க வேண்டும். (சவுக்கு மிளார் அல்லது தென்னை ஓலையை வைத்து, மண்ணை இழுத்து விதை வெளியே தெரியாமல் மூடுவது) நடவு செய்த பின் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் கொடுத்தால் நல்லது. தண்ணீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் அதிக பட்சம் 20 நாட்களுக்கு ஒரு முறையாவது தண்ணீர் கொடுக்க வேண்டும்.

18 மற்றும் 38ம் நாட்களில் களையெடுக்கு வேண்டும். களையெடுத்ததும் அதை உடனடியாக நிலத்துக்கு வெளியே அப்புறப்படுத்த வேண்டும். பெரும்பாலானவர்கள் வரப்பிலேயே போட்டு வைக்கிறார்கள். இதனால், தாய் அந்துப் பூச்சிகள் அதிகளவில் அவற்றில் தங்கியிருந்து, முட்டைகளை உற்பத்தி செய்துவிடுகிறது. எனவே, வரப்பு எப்பொழுதுமே சுத்தமாக இருக்க வேண்டும். 60-ம் நாளுக்கு மேல் புழு தாக்கல் இருக்கும். அதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 60-ம் நாளில் ஏக்கருக்கு, 2 லிட்டர் பூச்சி விரட்டியோடு 150 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும். இலை கசப்பாக இருந்தால், புரோடீனியா புழு, கடலைச் செடியின் இலையைக் கடிக்காது. இதனால் உணவு கிடைக்காமல் புழுக்கள் நமது நிலத்திலிருந்து வெளியேறிவிடும்.

சாகுபடித் தொழில்நுட்பத்தை விவரித்த மதிவாணன் “ விதைத்த 110-வது நாளிலிருந்து 120 நாளுக்குள் செடியோடு சேர்த்து அறுவடை செய்ய வேண்டும். கடலையை தனியாக பிரித்தெடுத்தால் ஓடு நீக்காத கடலை, ஒரு ஏக்கருக்கு 30 மூட்டை வீதம் கிடைக்கும். ஒரு மூட்டை சராசரியாக 1,400 ரூபாய்க்கு விலை போனால், 42 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். எல்லா செலவும் போக, 17 ஆயிரம் ரூபாய் இலாபமாக கையில் நிற்கும்” என்கிறார்.

**தொடர்புக்கு:**

மதிவாணன், அலைபேசி : 99946-45038